செ. கு. எண்: 122 நாள்:05.10.2019

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின்

## அறிக்கை - 5.10.2019

காஞ்சிபுரம் மாவட்டம், நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. ரஜினிகாந்த்;**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்ட காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. மா. காசியய்யா;**

வேலூர் மாவட்டம், மேல்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. பா. சீனிவாசன்;**

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் நகர் மேற்கு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. சு. சந்திரசேகர்;** பழனி அடிவாரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. க. துரைராஜ்;**

விருதுநகர் மாவட்டம், மாவட்டக் குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. என். திருப்பதி;** மல்லி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. வி. பழனி செல்வ பாரதி;** சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. எம். கணேசமூர்த்தி;**

அரியலூர் மாவட்டம், மீன்சுருட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. கு. குமார்;** மாவட்ட ஆயுதப்படையில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்த வந்த **திருமதி பிச்சையம்மாள்;**

நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. சி. சுவாமிநாதன்;**

வாய்மேடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. எம். கண்ணையன்;**

தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. எம். இராஜமாரி;**

சேலம் மாவட்டம், பொருளாதாரக் குற்றப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. பொ. கணேசன்;** ஓமலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. பெ. சரவணன்;**

சென்னை பெருநகரக் காவல், கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. ஆ. ஜானகிராமன்;**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாவட்ட ஆயுதப்படையில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. செ. அசோக் குமார்;** கொள்ளிடம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. ட்டி. ராஜா;**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. கோ. கோதண்டபாணி;**

கன்னியாகுமரி மாவட்டம், ஈத்தாமொழி காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. மணிகண்டன்**

**.....** ஆகியோர் உடல் நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. எஸ். கணேசன்;**

சேலம் மாவட்டம், சேலம் மாநகர மத்திய குற்றப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. சி. வேணுகோபால்;**

சென்னை பெருநகரக் காவல், புனித தோமையர் மலை, ஆயுதப்படை, ‘‘ஆ’’ நிறுமம், 7 ஆம் அணியில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்த வந்த **திரு. ஆ. சுபாஷ்;**

தூத்துக்குடி மாவட்டம், காடல்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. ஐ. ஜேக்கப்;**

கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. கோ. சுரேஷ்குமார்;**

..... ஆகியோர் சாலை விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

**உடல் நலக் குறைவு மற்றும் சாலை விபத்துகளில் உயிரிழந்த 25 காவலர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.**

மேற்கண்ட **துயரச் சம்பவங்களில் உயிரிழந்த 25 காவலர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.**

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**